ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் |
| திகதி | 2020.02.11 |

## மத்திய வங்கி கொடுப்பனவுச் செயலி விழிப்புணர்வு மற்றும் வங்கி வசதியளிப்பு அமர்வொன்றினை நடாத்தியிருக்கிறது

இலங்கை மத்திய வங்கி 2020ஆம் ஆண்டினை இலங்கையின் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கலுக்கான ஆண்டாகப் பெயரிட்டிருக்கிறது. இம்முயற்சியின் முக்கிய குறிக்கோள் உரிமம்பெற்ற வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினாலும் மற்றும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினாலும் நாட்டிற்கு ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் கொடுப்பனவுத் திட்டங்களைப் பிரபல்யப்படுத்துவதேயாகும். விழிப்புணர்வு என்பது செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு பிரயோகங்களின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கான திறவுகோலாகும். இம்முயற்சி தொழில்நுட்பவியல் நியதிகளில் நாட்டினை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு உதவுமென மத்திய வங்கி நம்புவதன் காரணமாக, இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் டிஜிட்டல் கொடுப்பனவு மாதிரிகளைப் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

முதல் நடவடிக்கையாக, 2020 பெப்புருவரி 11ஆம் நாளன்று மத்திய வங்கியின் அலுவலர்களுக்காக கொடுப்பனவுச் செயலி விழிப்புணர்வு மற்றும் வங்கி வசதியளிப்பு அமர்வொன்றினை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ஒழுங்குசெய்தது. ஜஸ்ட்பே மற்றும் கியுஆர் குறியீடு போன்ற கொடுப்பனவு மாதிரிகளைப் பயன்படுத்தி செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளினூடாக கொடுப்பனவுகளுக்கு வசதியளித்துவரும் அநேக நிறுவனங்கள் இந்நிகழ்வில் பங்குபற்றின. இம்முயற்சி மத்திய வங்கி அலுவலர்கள் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளுடன் தாமாகவே பரீட்சியமாகிக்கொண்டு கொடுப்பனவுகளைச் செய்வதற்கு, குறிப்பாக மின் பட்டியல், நீர்ப் பட்டியல், தொலைபேசிப் பட்டியல் போன்ற பொது வசதிப்பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கும் அதேபோன்று இரண்டு கணக்குகளுக்கிடையிலான மாற்றல்களுக்கும் அவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இந்நிகழ்வில் பங்கேற்ற நிதியியல் நிறுவனங்களும் மற்றையவையும் நேரத்தையும், பணத்தையும் சேமிப்பதற்கும் அதேபோன்று முயற்சியையும் அதன் மூலமாக வினைத்திறனை உயர்த்துவதற்கும் உதவக்கூடிய இப்பாதுகாப்பான டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்

முறைகளைப் பயன்படுத்துவதற்கு பொதுமக்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பொதுமக்களிடையே டிஜிட்டல் கொடுப்பனவு மாதிரிகள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு தொடர்ந்தும் முயற்சிகளை எடுக்குமென மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. டிஜிட்டல் கொடுப்பனவுப் பிரயோகங்களின் பயன்பாட்டினை ஊக்குவிப்பது, புத்தாக்கங்களின் மீது சாதகமான தாக்கமொன்றினை உருவாக்கி போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கு உதவுவதுடன் அதன் மூலம் நிதியியல் சேவைகளின் வளர்ச்சியை ஊக்குவித்து டிஜிட்டல் கொடுப்பனவு நடவடிக்கைகளினதும் அதேபோன்று பொருளாதார நடவடிக்கைகளினதும் உயர்ந்த மட்டத்திற்கும் வழிவகுக்கும்.







BOC
SMARTGEN
THE BANK ACCOUNT
HAT'S IN TOUCH WITH YOU
mCash
genie
eZ Cash


SMARTGEN
NK ACCOUNT
TOUCH WITH YOU
mCash
genie
eZ Cash